**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 39/2021**

**Dated: 20.04.2026**

**Deposition of Witnesses for PW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திருமதி.சகுந்தலா** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகங்கை போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 17.02.2021ம் தேதி 16.00 மணிக்கு ரகசிய தகவலாளி ஆய்வாளரிடம் நேரில் ஆஜராகி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த ராமன் மகன் வேல்முருகன் என்பவர் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி முனீஸ்வரன்கோவில் சந்து அருகே கஞ்சா வைத்து விற்பனை செய்ய இருக்கிறார் என்றும் காவல் ஆய்வாளராகிய நீங்கள் நேரில் வந்ததால் அந்த நபரை அடையாளம் காட்டுவதாகவும் கிடைத்த தகவலை காவல் துணை கண்காணிப்பாளரிடம் தெரிவித்து அதிகாரிகளின் உத்தரவின்பேரில் நிலையத்திலிருந்து நானும், த.கா.அன்பரசன், முத்துக்குமார், சரவணன் ஆகியோருடன் தக்க உபகரணங்களுடன் 16.30 மணிக்கு புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான சிவகங்கை மாவட்டம் காரைக்குடி

முனீஸ்வரன்கோவில் சந்து அருகே 18.30 மணிக்கு சேர்ந்து தகவலாளியை சந்தித்து போதை பொருள் சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது டி.என்.63 வு 6966 என்ற வெள்ளைநிற Honda இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தவரை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு மறைய வாகனத்தை மறித்து அந்த நபரிடம் எங்களுடைய அடையாள அட்டையை காண்பித்து தங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரித்தபோது அவர் பெயர் வேல்முருகன் என்றும் அவர் முகவரியை சொன்னார். உம்மிடம் கஞ்சா எனும் போதை பொருள் உள்ளது. உங்களை சோதனை செய்ய வேண்டும் நீங்கள் சம்மதித்தால் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்ல உரிமையுள்ளது என்று அவரிடம் கூறி அவர் தேவையில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில் 19.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து, அதில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த சோதனை சம்மத கடிதம் **அ.த.சா.ஆ,1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இருசக்கர வாகனத்தில் இருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தபோது அதில் பூ, இலை, விதைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதை எடை போட்டு பார்த்தபோது 1.500 கிகி எடை இருந்தது. கஞ்சாவையும், அவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பகுப்பாய்விற்காக 25 கிராம் வீதம் இரு பொட்டலங்களில் NIB-CID சீல் வைத்து, அதற்கு S1,S2 என்று குறியீடு செய்தும், மீதமுள்ள 1.450 கிகி கஞ்சாவை அதே பையில் கட்டி, SHO சீல் வைத்து அதற்கு P1 என குறியீடு செய்தும், அதில் சாட்சிகள், எதிரிகளிடம் கையெழுத்து பெற்று, 1வது எதிரியை 20.15 மணிக்கு எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த 2வது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.3** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளை விற்ற குற்றத்திற்காக 20.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தார்கள். பின்பு கைது அறிக்கை தயார் செய்து, நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த கைது அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரி பொன்னியை சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காரைக்குடி செஞ்சை பிள்ளையார்கோவில் வீட்டில் அருகில் நடந்து வந்த நபரை வேல்முருகன் அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரித்தபோது தனது பெயர் பொன்னி, க/பெ.ராஜேந்திரன், செஞ்சை பிள்ளையார்கோவில் தெரு, காரைக்குடி என்று சொன்னார். அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த 2வது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கைது அறிக்கை தயார் செய்து, நானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த கைது அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் 23.30 மணிக்கு நிலையம் வந்து கு.எண்.5/2021 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B),25 NDPS Act – ன் படி வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் ரைடுக்கு நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தவுடன் விஏஓ, தலையாரியை அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் தற்சமயம் ஞாபகம் இல்லை. நான் எந்த ஆவணத்தையும் எழுதவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்ததில் நேரம், இடம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தனி நபர்களை அழைத்து வரவில்லை என்பதை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முனீஸ்வரன்கோவில் சந்து என்ற இடம் பொதுமக்கள்

நடமாட்டம் அதிகம் உள்ளது இடம் என்றால் சரிதான். கைது அறிக்கையிலும் நேரம், இடம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் NIB மாதிரி சீல் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் ஆய்வாளருக்கு தகவல் வந்ததாக சொல்வது பொய் என்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், நான் போலீஸ் பார்ட்டிகளுடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும், 1வது எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வீட்டில் இருந்த நபர்களை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கணிங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>மறு விசாணை:-</u>**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.